கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண்  62/2012

பிரதிவாதி தரப்பு சாட்சி-1 சுலைமான் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.01.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்திற்கும் எதிரிடை சொத்திற்கும் அக்பர் தான் உரிமையாளர் என்றும், அவரிடமிருந்து நாங்கள் கிரையம் பெற்றோம் என்றால் சரிதான்.  எனது இடத்திற்கு வடக்கே கிழமேலாக 5 அடி பாதை உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதையை பொறுத்து தான் பிரதிவாதிக்கும் மற்றொருவர்க்கும் வழக்கு நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது.  பி.சா.ஆ.21 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி தெரியவில்லை.  பி.சா.ஆ.21 ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியாமலேயே தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்களில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும்.  பி.சா.ஆ.24 ல் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது.  அதில் உள்ள விவரங்கள் தெரியாமல் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2. பழைய வழக்கு பற்றி  முழு விவரங்கள் எனக்கு தெரியாது  என்றும், அதனால் இந்த வழக்கின் முழு விவரங்களும் எனக்கு தெரியாது என்றால்  சரியல்ல. பழைய வழக்கின் விவரம் தான் தெரியாது.  எனது தாயாருக்கு தான் பழைய வழக்கு விவரம் தெரியும்.  வாதியின் விட்டுக்கு தெற்கே சுவர் தான் உள்ளது. அதில் வழி இல்லை என்றால் சரிதான்.  வாதியின் வீட்டிற்கு மேற்கேயும் சுவர் தான் உள்ளது என்றால் அந்த சுவரை பொறுத்து தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது பொது சுவர் ஆகும்.  பதிலுரையில்  வாதியின் தாயாருக்கும், எனக்கும் இடையில் 04.05.2000 ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.  வாதி தனது வீட்டிற்கு கிழக்கு புறம் உள்ள  தனது இடத்தில் நான் ஆக்கிரமித்து சுவர் எழுப்பியுள்ளதாகவும், அதை இடிக்க வேண்டுமென இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

3. அது பொய்யான வழக்காகும். இடிக்க வேண்டும் என சொல்லப்பட்டுள்ள சுவர் B பட்டியலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். B பட்டியல் சொத்தில் பாதி வாதி நிலத்திலும், பாதி எனது நிலத்திலும் கட்டப்பட்டிருப்பதாக பதிலுரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அளவுகள் குறிப்பிடப்படவில்லை. பதிலுரை தாக்கல் செய்த போது அளவுகள் தெரியும் என்றால் சரிதான். ஆனால் பதிலுரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வாதியின் இடத்தை ஆக்கிரமித்து செய்து கட்டியதை ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. அக்பரிடமிருந்து யார் முதல் கிரையம் பெற்றது என்றால் நான் தான் வாங்கினேன். பின்னிட்டு வாதி வாங்கினார். எனது நிலத்திற்கு கிழக்கே உள்ள புறம்போக்கு நிலத்தை நான் அனுபவிப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கிரைய ஆவணத்தில் எந்த இடத்திலாவது புறம்போக்கு இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. எனது இடத்திற்கு கிழக்கே உள்ள இடம் புறம்போக்கு இடம் என காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ-3 கட்டிட அனுமதி பெறுவதற்கு பி.சா.ஆ.1 ஆவணத்தை காட்டினேனா என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாருக்கு தான் தெரியும். எதிரிடையில் சொல்லப்பட்டுள்ள பட்டா எப்போது கொடுத்தார்கள் என்றால் தெரியவில்லை. குளித்தலை நகராட்சியால் கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். நான் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் கட்டிட அனுமதி பெற்று அனுபவம் செய்து வருகிறேன் என்றும், பட்டா தவறுதலாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1ம் வாதி அவரது மகன் 3 ம் வாதி ரபீக்கு தானா செட்டில்மெண்ட் செய்து கொடுத்தாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது சொத்தை யும் சேர்த்து ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். மேற்படி ஆவணத்தை பொறுத்து செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

5. நான் சொல்வது போல பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். நகராட்சியில் எனக்கு கொடுத்த பட்டா தவறானது என 3ம் வாதி எத்தனை இடத்திற்கு மனு செய்தார் என்றால் அது பற்றி தெரியாது. நகராட்சி ஆணையர், வருவாய் கோட்டாட்சியர் , மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோருக்கு மனு

கொடுத்தால் நான் அவரிடம் பிரச்சனை செய்தேனா என்றால் இல்லை. 3ம் வாதியின் விண்ணபத்திலேயே எனக்கு பட்டா கொடுத்தது சரியென ஒப்புக்கொண்டுள்ளார். எது எந்த விண்ணபத்திற்கு எந்த அதிகாரி எந்த தேதியில் சரியென ஒப்புக்கொண்டார் என எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த விண்ணபத்தில் முடிவு எட்டப்படவில்லை, நிலுவையில் உள்ளது என்றும், நான் வழக்கிற்காக சரியென ஒப்புக்கொண்டதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6. 3ம் வாதி கொடுத்த மனுவின் மீது அதிகாரிகள் எனது பட்டா சரியென உத்தரவு பிறப்பித்திருந்தால் அதை எனது பதிலுரையில் சொல்லியிருப்பேன் என்றும், அந்த உத்தரவை தாக்கல் செய்திருப்பேன் என்றால் எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். எனது வழக்கறிஞருக்கு வழக்கு விவரங்களை யார் சொன்னது என்றால் எனது தாயார் தான் சொன்னார். எனக்கு சில விவரங்கள் தான் தெரியும். 1ம் வாதி அக்பரிடமிருந்து விலைக்கு வாங்கிய கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 3ம் வாதிக்கு தானசெட்டில்மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் பட்டாவின் அடிப்படையில் எனது உரிமையை தீர்மாணிக்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கு கொடுக்கப்பட்ட பட்டா தவறானது அதை பொறுத்து விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

7. எனக்கு மேற்கே தான் வாதி இருக்கிறா என்றால் சரிதான். எவ்வளவு காலமாக இருக்கிறார்கள் என்றாட்ல எனது சிறுவயது முதலே இருக்கிறார்கள். தற்போது எனக்கு வயது 58 ஆகும். தாவாவுடன் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. மாதிரி வரைபடம் பொறுத்து எனது வழக்கறிஞரிடமோ, எனது தாயாரிடமோ கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் எந்த திசையில் நான் குடியிருக்கேன், எந்த திசையில் வாதி குடியிருக்கிறார் என தெரியாது என்றால்சரிதான். எனது பதிலுரையில் நானும் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. தாவாவின் அடிப்படையில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

8. எதிரிடை கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், எனக்கு வழங்கப்பட்ட பட்டா முறைகேடானது என்றும், அதன் அடிப்படையில் உரிமையை

தீர்மாணிக்க முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வரி இரசீதுகள், மின் கட்டண இரசீதுகள் அடிப்படையில் எதிரிடை கோரிக்கை பரிகாரத்தை தீர்மாணிக்க இயலாது என்றால் சரியல்ல. முறைகேடாக பெறப்பட்ட பட்டாவிற்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிடை கோரிக்கை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரததால் எதிரிடை கோரிக்கை நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

Kulithalai.